පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF PERADENIYA

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொலை தொடர் கல்வி நிலையம்
CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - අගෝස්තු 2018
**பொதுக் கலைமாணி பரீட்சை (வெளிவாரி) - டிசம்பர் 2018**
GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - DECEMBER 2018

**Philosophy - I / General Psychology (PHG - I)**
**மெய்யியல்-I / பொது உளவியல் (PHG - I)**

இவ்வினாத்தாளில் எல்லாமாக **பத்து** (10) வினாக்கள் காணப்படுகின்றன.

எவையேனும் **ஐந்து** (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

நேரம்: மூன்று (03) மணித்தியாலம்

---

**1.** "அனுபவ உளவியலின் எழுச்சி என்பது 19ஆம் நூற்றாண்டு மேற்கத்திய மெய்யியல் மற்றும் உடற் கூற்றியல் ஆகியவற்றின் ஒரு விளைவாகும்" இக் கூற்றை உதாரணங்கள் தந்து விளக்குக. (20 புள்ளிகள்)

**2.** நவீன உளவியலின் பின்வரும் கிளைகள் குறித்து சுருக்கமான விளக்கங்கள் தருக.

(அ) குழந்தை உளவியல் (ஆ) பிறழ்வு நிலை உளவியல்

(இ) தடய (சட்ட) உளவியல் (ஈ) அறிவு சார் உளவியல்

( 04 × 05 = 20 புள்ளிகள்)

**3.** (அ) "ஆளுமை" எனும் எண்ணக் கருவை எவ்வாறு வரையறை செய்வீர்? ( 05 புள்ளிகள்)

(ஆ) ஆளுமை குறித்த மனித நலக் கோட்பாட்டை ஆராய்க. (15 புள்ளிகள்)

**4.** பின்வரும் கற்றல் கொள்கைகளை விளக்குக.

(அ) மீள்வலியுறுத்தல் (Reinforcement)

(ஆ) பொதுமையாக்கம் (Generalization )

(இ) விளைவு விதி (Law of effect)

(ஈ) மறை நிலைத் திறன் கற்றல் (Latent learning) ( 04 × 05 = 20 புள்ளிகள்)

5. (அ) மனிதனுடைய ஞாபகத்தின் அமைப்பினை விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) 'நாம் ஏன் மறக்கின்றோம்' என்ற விடயத்தை இரண்டு கோட்பாட்டு ரீதியான விளக்கங்களைக் கொண்டு சுருக்கமாக விளக்குக. (02 × 05 = 10 புள்ளிகள்)

6. காட்சி ஒழுங்கமைப்பு பற்றிய கெஸ்ரோல்ட் கோட்பாட்டை நுணுகி ஆராய்க. (20 புள்ளிகள்)

7. ஊக்கி என்றால் என்ன? ஊக்கி குறித்த சிக்மன்ட் புரொய்டினுடைய உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டை ஆராய்க. (20 புள்ளிகள்)

8. (அ) மனவெழுச்சிகளுக்கும் உடல் ரீதியான எதிர் வினைகளுக்குமிடையிலான தொடர்பை எடுத்துக் கூறி அதனைப் பரிசிலீக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) மனவெழுச்சியை முகாமைத்துவம் செய்வதன் பெறுமானத்தை நீர் எவ்வாறு புரிந்து கொள்கின்றீர் என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

9. "உயிரினத்தின் உளச் செயற்பாட்டை ஆராய்வதில் நடத்தை வாதம் மிகவும் தீவிரமானது" இக் கூற்றை ஆராய்க. (20 புள்ளிகள்)

10. பின்வருவனவற்றுள் ஏதேனும் **நான்கினைப்** பற்றி கருத்துரைக்குக.

I. அனுபவ உளவியலில் முறைகள்

II. செயற்திறன் ஞாபகம் (Working Memory)

III. அமைப்பியல் வாதத்தின் முக்கியத்துவம்

IV. ஒடிபஸ் சிக்கல்

V . நுண்ணறிவுச் சோதனைகள்

VI. உளவியலும் விஞ்ஞானமும் (04 × 05 = 20 புள்ளிகள்)